இலங்கையில் தோற்றம்பெற்ற சிவாலயக் கிரியை விளக்க நூல்களும் அவற்றின் தத்துவார்த்தமும்

நா. வாமன்

தலைவர், இந்து நாகரிகத் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

அறிமுகம்

சைவர்களது ஆலய வழிபாட்டிற்கும், அவற்றின் கிரியைகளுக்கும் தத்துவார்த்தமான அர்த்தமுண்டு. அவற்றில் சைவாலயக் கிரியைகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. வேதந் தழுவிய வைதிகக் கிரியைகள் போலன்றி, சைவக்கிரியைகள் ஆகமநெறிக்கு முதன்மையளிப்பதோடு, அந்நெறியை பின்பற்றுவனவாகவும் விளங்குகின்றன. இருபத்தெட்டு சிவாகம விதிகளுக்கு அமைவாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சைவாலயக் கிரியைகள் சிவாகமங்களின் தத்துவசாரமாகிய சைவசித்தாந்தத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன. உலக அளவில் பெருந்தத்துவமாக விளங்குகின்ற சைவசித்தாந்தத்தைச் சைவர்கள் அறிந்திருப்பதுடன் சைவக் கிரியைகளை இத்தத்துவத்தின் பின்னணியில் விளங்கிக் கொள்வதும் அவசியமானதாகும். அதன் தாற்பரியத்தினை எடுத்துரைக்கும் நோக்கில் இலங்கையில், அந்தண சிவாச்சாரியார்களாலும் ஏனைய புலமையாளர்களாலும் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் சிவஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம், சைவக்கிரியை விளக்கம், மகோற்சவ விளக்கம், சைவத் திருக்கோயிற் கிரியை நெறி, சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள், சைவாலயக் கிரியைகள் ஆகிய நூல்கள் சிறப்பு வாய்ந்தவை. சித்தாந்த நோக்கில் இந்நூல்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

சிவசேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம்

யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை மேலைப்புலோலியைச் சேர்ந்த நா. கதிரைவேற்பிள்ளை என்பவரால் எழுதப்பட்டதே ‘சிவசேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம்’ என்ற நூலாகும். 1896ஆம் ஆண்டு முதற்பதிப்பாக வெளிவந்த இந்நூல் 2017ஆம் ஆண்டு தி. செல்வமனோகரனால் மறுபதிப்புச் செய்யப்பட்டு, பருத்தித்துறை நண்பர்கள் கல்வி சமூக நலன்சார் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் சைவத் திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களின் அடிப்படைத் தத்துவத்தை வெளிப்படுத்தும் ஆதித் தமிழ் நூல் என்று சிறப்பிக்கப்படுகின்றது (செல்வமனோகரன், 2017).

வெறுமனே சைவாகமக் கருத்துக்களை மட்டும் கூறுவதோடு நின்றுவிடாது சைவாகம நெறியையும், சித்தாந்த நெறியையும் இணைத்து சைவத் திருக்கோயில்களின் திருவிழாத் தத்துவத்தை எடுத்துரைக்கின்றது. கிறிஸ்து, முகமதியம், யூதம், உலகாயதம் எனத் தொடங்கி அனைத்து சமயங்களையும் எடுத்துரைத்து, பல சமயங்கள் இருப்பினும் அவை எல்லாவற்றையும் கடந்து சிரம்போல நின்றொளிர்வதும், அகச்சமயம் ஆறுக்கும் விரோதமின்றி அவற்றின் முடிவாய் நிற்பதும், வேதாந்த தெளிவுண்மையை உணர்த்துவதும், வைதிக சைவ

சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயமேயாம் (மேலது:02) எனக் கூறுகின்றமை அவரின் சித்தாந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றது.

இந்நூலானது சிவவிளக்கம், சேத்திராலய விளக்கம், மகோற்சவ விளக்கம் எனும் மூன்று பகுதிகளைக் கொண்டு விளங்குவதோடு, நூலின் காப்பும், அவையடக்கமும் செய்யுட்களாக அமைய, நூல் உரைநடையில் அமைந்துள்ளது. இதில் இடம்பெறும் அவையடக்கப்பாடல் நூலின் நோக்கம், தேவை என்பவற்றை தெளிவுபடுத்துகின்றது. இம்மூன்று பகுதிகளை விளக்கிக் கூறும் முகமாக 65 நூல்களிலிருந்து எடுத்துக்காட்டுகளைக் கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கதிரைவேற்பிள்ளை இந்நூலின் முதற்பகுதியில் சைவத்தின் மேன்மையை நிறுவுவதற்கு சித்தாந்த நூல்களையும், புராண நூல்களையும், தாயுமானவசுவாமிகள் போன்றோர்களின் பாக்களையும் முன்வைத்து சைவத்தின் உண்மைத் தத்துவத்தை ஆராய்ந்துள்ளார். மேலும் புறப்பூசை, அகப்பூசைகளின் சிறப்பம்சங்களையும் தெளிவுபடுத்தியுள்ளார். குறிப்பாக அகவழிபாட்டின் மானச பூசையின் சிறப்பு தனித்துவமாக எடுத்துரைக்கப்படுதல் குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்நூலில் சரீரமும், அண்டமும் சமம் என்பதையும் தெளிவுற விளக்கும் ஆசிரியர், தேகத்தின் சேத்திர நிலைகள், சிறப்புக்களையும் ஆங்காங்கு சிறப்பித்துச் செல்கிறார். அத்தோடு ஆகம அமைப்பு முறை, அதன் உறுப்புக்கள் என்பன உணர்த்தும் தத்துவங்களையும் பேசியுள்ளார். குறிப்பாக, சிவலிங்கம், அதன் சிறப்பம்சங்கள், வழிபாட்டு மரபுகள் போன்றன எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மகோற்சவ விளக்கம் பற்றிப் பேசும்போது மகோற்சவத்தின் முதன்மை பிரதஷேணம், நமஸ்காரம், சிவ தரிசனம், அபிசேகம், கீதமிசைத்தல், சோடசோபசாரம், தசோபசாரம், பஞ்சோபசாரம், யாகம், கும்பம், காலம், விஷேடம், துவசாரோகணம் முதலிய உற்சவ சிறப்பம்சங்களையும், அவை உணர்த்தும் பஞ்சகிருத்தியங்களையும் எடுத்தாள்வது குறிப்பிடத்தக்கது.

ஆன்மாக்களின் நன்மைகருதி ஆற்றப்படும் ஆன்மார்த்த கிரியைகள் ஆன்ம ஈடேற்றத்திற்கான மார்க்கமாக அமைகின்றன. இது சைவசித்தாந்தம் கூறும் ஆன்ம விடுதலையோடு மிக நெருக்கமான சம்பந்தம் கொண்டது. ஆன்மா இறைவனை அடைய முடியாது சரீரம் நீத்தால் அது மறுவுலகில் வினைகளை அனுபவித்து மீண்டும் ஒரு பருவுடலைப் பெற்று இறைவனை அடைவதற்காகப் பிறக்க வேண்டும். இதற்காக ஆற்றப்படும் அபரக் கிரியைகள் ஆன்ம உடல் நீங்கிச் சென்ற பின் அந்த உடல் பந்தம் முற்றும் விலகி விட வேண்டும் என்பதற்காக ஆற்றப்படும் கிரியையாக அமைகின்றது. பூர்வக் கிரியைகள் இவ்வுலகில் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆற்றப்படும் கிரியைகளாக அமைகின்றன. இவ்வாறாக கிரியைகளின் வழியே சைவசித்தாந்த தத்துவத்தைத் தளமாகக் கொண்டு ஆன்ம விடுதலையை இந்நூல் விளக்கி நிற்பது குறிப்பிடத்தக்கது.

சைவக்கிரியை விளக்கம்

கிரியைகளின் விளக்கமாய் எழுந்த நூல்களுள் அடுத்து முக்கியம்பெறுவது சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனாரின் ‘சைவக் கிரியை விளக்கம்’ என்ற நூலாகும். சைவபரிபாலன சபையினால் 1928இல் வெளியிடப்பட்ட இந்நூலானது நான்கு இயல்களைக் கொண்டுள்ளது. முதலாம் இயல் சைவசமயம் பற்றியும், இரண்டாம் இயல் கிரியைப் பகுதிகள் பற்றியும், மூன்றாம் இயல் கிரியை உறுப்புக்கள் பற்றியும், நான்காம் இயல் பூர்வக் கிரியைகளாகிய தீட்சையும், விவாகமும், தனக்கும் பிறருக்குமுரியதாகிய சிவாலய பூசாதிகளும், அபரக்கிரியை போன்ற விடயங்களையும் கொண்டுள்ளன.

சைவசமயவியல் என்ற இயலிலே கடவுளின் இருப்பு, இயல்புகள், ஆன்மாக்களின் இலக்கணம், இறை – ஆன்மத் தொடர்புகள் என்பன சைவசித்தாந்த அடிப்படையில் விளக்கப்படுகின்றன.

கிரியையுறுப்பியல் என்ற பகுதியில் கிரியைகளின் உறுப்புக்கள் பற்றிக் கூறவிழைந்த ஆசிரியர் கரசுத்தி, கரநியாசம், அங்கநியாசம், சிவோகம்பாவனை, பூசை முதலியனவற்றை ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார். சிவோகம் பாவனை பற்றிப் பேசும்போது மந்திர செபம் செய்ய முன் சிவோகம் பாவனை செய்யப்படும் என்றும் அதிற் குறிப்பிடுகின்றார் (சிவபாதசுந்தரம், 2000).

திருக்கோயில் பற்றி விளக்கும்போது திருக்கோயிலானது சைவசித்தாந்த உண்மைகளை உணருவதற்கும், சாதித்தற்கும் இடமாயுள்ளது என்று விளக்கப்படுகின்றது. சிவலிங்கம், நந்தி, பலிபீடம் ஆகிய மூன்றும் முத்தி முறையை விளக்கி நிற்கும் முப்பொருள்களாகும். பலிபீடமானது பாசத்தை நீக்கும் சிவ சத்தியென்றும், சிவலிங்கம் சிவாநந்தத்தைக் கொடுக்கும் சிவமெனவும், நந்தியானது முத்தியடைந்த ஆன்மா என்றும் அதிற் குறிப்பிடப்படுகின்றது. மலத்தை நீக்குவதால் பலிபீடம் பத்திர லிங்கம் எனப்படும். பத்திர லிங்கமாவது மங்கலத்தை உண்டாக்கும் லிங்கமெனப் பொருள்படும். மங்களமாவது பாசநீக்கம் என்று பெயர் பெறும் எனவும் எடுத்துரைக்கப்படுகின்றது (மேலது: 44).

ஆலயங்களில் மேற்கொள்ளப்படுகின்ற உற்சவங்களிலும்கூட சித்தாந்த சிந்தனையின் இருப்பினை அறிய முடிகின்றது. அந்தவகையில் உற்சவம் என்பது பல பொருள்களில் வழங்கி வருகின்றது. இதில் உத் என்பது மேலான என்ற பொருளையும், சவம் என்ற சொல் ஐந்தொழில் என்ற பொருளையும் சுட்டி நிற்கின்றது. மேலான ஞானத்தையும், போக மோட்சத்தையும் கொடுக்கின்றது. சிவன் ஐந்தொழில்களின் மூலம் உயிர்களைக் காக்கும் முறையை திருவிழாக்கள் வெளியிடுகின்றன. கொடியேற்றம் வரையுள்ள கிரியைகள் படைத்தலையும், வாகனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும், மௌனோற்சவம் மறைத்தலையும், தீர்த்தம் அருளலையும் சுட்டி நிற்கும் என்பது விளக்கப்படுகின்றது(மேலது:47). அந்தவகையில் கொடிமரமானது சிவபெருமானையும், கொடிச்சீலை ஆன்மாவையும், கயிறு பாசத்தையும் குறிப்பதோடு, படைத்தலுக்கு முன் ஆன்மாவும், பாசமும் ஒடுங்கியிருக்கச் சிவம் மாத்திரம் தோன்றும் என்றும் கொடியேற்ற நிகழ்வானது சித்தாந்த பார்வையில் அணுகப்பட்டிருப்பது நோக்கத்தக்கது.

மகோற்சவ விளக்கம்

அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்களால், ஆகமவிதிக்கமைந்த ஆலயங்களில் நடைபெறுகின்ற உற்சவங்களில் பொதிந்துள்ள சைவசித்தாந்த உண்மைகளைத் தெளிவுபடுத்தும் நோக்கில் எழுதப்பட்டதே 'மகோற்சவ விளக்கம்' எனும் நூலாகும். சிவாசாரியார்களை நெறிப்படுத்தவும் ஆலய தர்மகர்த்தாக்கள், உபயகாரர்கள், பக்தர்கள் முதலியோரை வழிப்படுத்தவும் மகோற்சவ சந்திரிகை எனும் நூல் 1932இல் எழுதப்பட்டதாகவும், அந்நூல் கூறும் விடயங்களை விரித்தும், பல புதிய விடயங்களை சேர்த்தும், விளக்கியும் 1958 இல் வெளியிட்ட நூலே மகோற்சவ விளக்கமாகும் என்றும் குறிப்பிடுவர். அந்நூலுக்கு மதிப்புரை வழங்கிய சே.வெ.ஜம்புலிங்கம் அவர்கள் நூல் தோன்றிய பின்னணி குறித்து மேல்வருமாறு குறிப்பிடுகின்றார்

"மகோற்சவ விளக்கம் என்னும் இந்நூல் முன் சந்திரிகையில் சுருக்கிக் கூறப்பட்ட வியங்களை விரித்தும், அங்கே கூறப்படாத பல வியங்களைச் சேர்த்தும், திருத்தியும், விளக்கியும், குருக்களவர்களால் எழுதப்பெற்று, எனது மூலமாகச் சென்னையில் நாவலர் பெருமான் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்படுகின்றது." (ஜம்புலிங்கம், 2015:02)

அதேபோல, இந்நூல் சிவாலய மகோற்சவங்களின் உண்மையை நன்கு விளக்கும் நூல் என்றும், சமஸ்கிருத பத்ததிகளின் சாரமாக விளங்குகின்றது என்றும், பல அருமை வாய்ந்த தேவார, திருவாசக திருவருட்பாக்களின் கருத்துக்களை நனி விளக்குவது என்றும் ஜம்புலிங்கத்தால் புகழப்பட்டுள்ளது. (மேலது:02) சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டு முத்திக்குரிய சாதனமாகக் கிரியை நெறியை ஆலய வழிபாட்டினூடாக எடுத்துக் கூறுவதாக அமையும் இந்நூல் கிரியைகளை ஞானத்திற்கு வழிகாட்டியாகக் கொள்கின்றது.

பத்ததிகளை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் மகோற்சவ கிரியைகளுக்கு என்னென்ன பயன் கிடைக்கின்றது என்பதை எடுத்துக் காட்டும்போது இம்மைப் பயன்கள் மட்டுமின்றி சைவ சித்தாந்த தத்துவ நோக்கில் ஆன்மாக்கள் மலநீக்கம் பெற்று மேலான முத்தி பெறும் பயன்களையும் எடுத்துக்கூறுகின்றமை மகோற்சவ விளக்கத்தில் தனித்துவமானது. மகோற்சவ காலங்களில் பலவகையான திரவியங்களாலும், தூய நீரினாலும் அபிஷேகம் செய்வது கிரியையின் முக்கிய அங்கமாகும். இங்கு அபிஷேகம் செய்யப்படும் ஒவ்வொரு திரவியத்திற்கும் ஒவ்வொரு பயன் கிடைக்கும். அரிசிமா அபிஷேகம் - மலநாசமும், பஞ்சகௌவிய அபிஷேகம் - மோட்சமும், சகஸ்ரதாரா அபிஷேகம் - சாயுச்சிய முத்தியும் கிடைக்க உதவும் என்று குறிப்பிடுகின்றது. பொதுவாகவே அபிஷேகம் செய்வது மனத்தைச் சுத்தம் செய்வதைக் குறிக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றார் ஆசிரியர்.

மகோற்சவத்தின் பத்துநாள் உற்சவத்தில் ஒவ்வொரு தினமும் குறித்து நிற்கும் சித்தாந்த தத்துவ சிந்தனையை குருக்களவர்கள் நுணுகி ஆராய்ந்துள்ளார். "மகோற்சவ நாள் பத்தினுள் முதல் நாள் விழா தூலம் நீங்குதற் பொருட்டும், இரண்டாம் நாள் விழா தூலசூக்குமம் நீங்குதற் பொருட்டும், மூன்றாம் நாள் விழா மூவினையும், முப்புத்தியும், முக்குணமும், மும்மலமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முற்பற்றும், நீங்குதற் பொருட்டும், நான்காம் நாள் விழா நாற்கரணமும் நால்வகைத் தோற்றமும் நீங்குதற் பொருட்டும், ஐந்தாம் நாள் விழா

ஐம்பொறியும், ஐந்தவத்தையும், ஐந்துமலமும் நீங்குதற் பொருட்டும், ஆறாம் நாள் விழா கலையாதி ஆறும், வினைக்குணமாறும், பதமுத்தியாறும் நீங்குதற் பொருட்டும், ஏழாம் நாள் விழா எழுவகைப் பிறப்பும் காலாதி ஏழும் மாயமலகுணமேழும் நீங்குதற் பொருட்டும், எட்டாம் நாள் விழா எண்குணம் விளக்குதல் பொருட்டும் ஒன்பதாம் நாள் விழா மூன்றுருவும், முத்தொழிலும் மூன்றெழுத்துரைத்தலும் இல்லையெனற் பொருட்டும், பத்தாம் நாள் விழா பரமானந்தக்கடலில் அழுந்துதற் பொருட்டும் செய்யப்படுகின்றது." (மேலது: 82-115)

ஆலயங்களில் நிகழும் மிருகயாத்திரை அல்லது சங்கார யாத்திரை எனும் வேட்டைத் திருவிழா பன்றி போன்ற ஆணவ மலமும், மான் போன்ற கன்ம மலமும், பட்சி போன்ற மாயா மலமும் ஆன்மாவை வருத்தும் துட்டர்களாவர். இம்மலங்களை அடக்கிச் சாயுச்சியம் கொடுக்கும் குறிப்பே வேட்டைத் திருவிழா ஆகும் (மேலது:117). தேர்த்திருவிழாவானது சிவன் அண்ட சராசரங்களைக் கொண்டமைந்த தேரில் சென்று முப்புரத்தசுரர்களை புன் சிரிப்போடு ஒரு நெற்றிக்கண்ணால் எரித்தமையை குறிக்கின்றது. உண்மையில் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை அழித்த தத்துவத்தை இது உணர்த்தி நிற்பதாகக் குருக்கள் பதிவிடுகின்றார். இதற்கு திருஞானசம்பந்தருடைய பாடலொன்றையும் மேற்கோள் காட்டுகின்றார்.

"விருது குன்றமா மேவி னாணர
வாவன லெரியம்பாற்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்..."

அதுபோல தனு, கரண, புவன போகங்கள் நான் எனும் அகங்காரத்தையும், எனது என்ற மமகாரத்தையும் எழுப்புவன. அவைகளைச் சக்தியால் இடித்துச் சுத்த சூரணமாக்கி இறைவனிடத்தில் ஒப்பிக்க அவர் திரோபவ கிருத்தியம் செய்தருள்வார். அப்பொழுதே ஆன்மா இருவகைப் பற்றுமற்றுத் தன் செயலற்று சிவன் செயலாய் நிற்கும் என சூர்ணோற்சவத்தில் மறைந்திருக்கும் சித்தாந்த தத்துவத்தை விளக்க முற்படுகின்றார். அதாவது சுண்ணமிடித்தல் எனப்படும் நிகழ்வில் மஞ்சள் செருக்காகவும், அதனை இடிக்கும் உலக்கை இறையருளாகவும் கொள்ளப்பட்டு, பின் இடித்துப் பெறப்படும் மஞ்சள் தூள் பக்குவமடைந்த ஆன்மாவாக அடையாளப்படுத்தப்படுவதனைக் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறாக ஒரு உண்மையை விளக்க பல்வேறுபட்ட நூல்களிலிருந்தும் உதாரணங்கள் தந்து விளக்கும் பாங்கு இவரது பன்முக ஆளுமையைச் சுட்டுவதாக அமைகின்றது. இறுதியாக சண்டேஸ்வர உற்சவம் சிவோற்சவ பலனைத் தரும் என்று குறிப்பிட்டு, முக்தியின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்படுகின்றது. இறுதியாகச் சண்டேசுவரரை வழிபட்டால் மாத்திரமே முக்திப் பலன் கிட்டும் என்பது குருக்கள் தரும் விளக்கமாகும்.

சைவத் திருகோவிற் கிரியை நெறி

ஆகமக் கிரியைகளையும், அவற்றுடன் தொடர்புடைய விடயங்களையும் முறைப்படுத்தி விளக்கும் 'சைவக் திருக்கோவிற் கிரியை நெறி' எனும் நூல் கா.கைலாசநாதக் குருக்களால் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் 1963இல் கொழும்பு இந்து கலாபிவிருத்திச் சங்கத்தால்

முதற்பதிப்புச் செய்யப்பட்டது. அனுட்டானத்திலிருக்கும் வழக்கை அனுசரித்துக் கிரியைகள் விளக்கப்பட்டுள்ளன. கிரியைகள் நடத்தும் சிவாசாரியார்களுக்கும், அருச்சகர்களுக்கும் வழிகாட்டியாக அன்றி திருக்கோவில்களில் நித்திய, நைமித்தியக் கிரியைகள் நிகழும்வேளை சென்று தரிசிக்கும் அடியார்களுக்குப் பயன்படும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

முகவுரை உள்ளடங்கலாக கிரியைகளின் புராதன வரலாறு, இதிகாச புராணங்கள் கூறும் கிரியைகள், திருக்கோவில், திருவுருவங்கள், கிரியைகள், பரிவார தெய்வங்கள், கிரியைகளின் உட்பொருளும், உயர் நோக்கும் முதலிய தலைப்புக்களைக் கொண்டமைந்துள்ளது. ஆகமக் கிரியைகளின் விளக்கம் சைவசமயத்தின் பெருமையினை உணர மிகவும் இன்றியமையாதது ஆகும். அந்தவகையில் இந்நூலானது இலங்கையிலும், தென் பாரதத்திலும் விளங்குகின்ற சைவத் திருக்கோவில்களில் நிகழ்ந்து வரும் ஆகமக் கிரியைகளின் விளக்க வரலாறு கூறும் நோக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நூலில் சைவாகம கிரியைகள் விளக்கப்பட்டுள்ள அதே சமயம் அவை சைவசித்தாந்த நோக்கில் அணுகப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். கிரியைகளை விளங்கிக் கொள்வதற்கு முன்னர் கிரியைகளுக்கு முக்கியத்துவமான திருவுருவங்கள் பற்றி அறிதல் வேண்டுமென குறிப்பிடும் ஆசிரியர் அத்திருவுருவங்களை அறிந்து கொள்ள இராமாயண, மகாபாரத இதிகாசங்களையும், பதினெண் புராணங்களையும், சமயக் கிரியைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிறார். சிவனது திருக்கோலங்கள் புறத்தோற்ற பிரதிமாலட்சணங்கள் என்பவை புராணங்களில் தத்துவார்த்தமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளதாகக் கூறி திருவுருவ வழிபாட்டை தத்துவத்தோடு இணைத்துக்காட்ட முனைந்துள்ளார்.

சிவனது ஐந்து திருமுகங்களும் சைவசித்தாந்தம் கூறும் பஞ்ச கிருத்தியங்களோடும், முக்கண்கள் இராசதம், தாமசம், சாத்விகம் எனும் முக்குணங்களோடும் தொர்புடையவை என்பதைப் புராணங்களோடு தொடர்புபடுத்தி விளக்குகிறார். இதுபோலவே யோகேஸ்வரனாக நின்று சனகாதி முனிவர்களுக்கு ஞானம் போதித்த தட்சணாமூர்த்தி வடிவத்தை சைவசித்தாந்தம் கூறும் ஞானமார்க்கத்தோடு தொடர்புபடுத்துகிறார் (கைலாசநாதக்குருக்கள், 2009: 29-31).

புராணங்கள் யாகத்தைக் காட்டிலும், தவத்திற்கே அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன. ‘கலியுகத்தில் தவம் ஒன்றே என்னை அடையச் சிறந்த வழி’ எனச் சிவன் கூறியதாக புராணங்கள் எடுத்துரைக்கின்றன. இதன்படி சைவசித்தாந்தம் கூறும் முக்திக்குரிய மார்க்கங்களோடு தவமும் யோக மார்க்கத்தின் வழி ஏற்புடையதாகின்றமையை அவதானிக்கலாம்(மேலது:40). கிரியைகளின் உட்பொருளும் உயர் நோக்கும் என்ற பகுதியில் பரம்பொருளாகிய சிவபெருமானை அடைவதற்குரிய சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் சைவ நாற்பாதங்கள் விளக்கப்பட்டுள்ளன (மேலது: 214). கருவறையிலுள்ள மூலலிங்கத்திற்கு எதிரே நேராக நிமிர்ந்து நிற்பது கொடிமரம், இதைப் போன்று உடலையும், நேராக இருத்தி இடகலை, பிங்கலை எனும் இருநாடிகள் வழியே பிராணவாயுவை நடு நாடியில் நிறுத்தித் தியானம் செய்யும் போது பிராணவாயு அசைவின்றி நிற்கும். இவ்வாறு நிறுத்தும்பொழுது மனம், ஐம்பொறிகள் அவற்றின் விடயங்கள் முதலியன படிப்படியாக ஒடுங்கும். அவ்வாறு ஒடுங்க மனம் ஒருவழிப்பட்டுப் பரமசிவ தரிசனம் ஏற்படும் என கொடிமர தத்துவத்தை விபரிக்கின்றார்.

முப்பொருளைக் கோயில்கள் உணர்த்தி நிற்கும் திறமும் ஆசிரியரால் எடுத்துரைக்கப்படுகின்றது. அவ்வகையில், சிவலிங்கம் - பதி, நந்தி -பசு, பலிபீடம் - பாசம் என்பவற்றைக் குறித்து நிற்பது விளக்கப்படுகிறது (மேலது:220).

சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்

பண்டிதர் மு.கந்தையாவால் எழுதப்பட்டதே ‘சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்’ என்ற நூலாகும். 1978ல் வெளியான இந்நூல் 2001, 2005ஆம் ஆண்டுகளில் மீள்பதிப்பு செய்யப்பட்டு வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மு.கந்தையா அவர்கள் சைவக்கிரியைகள் பற்றிய உண்மையையும், உயர்நிலையையும் சித்தாந்தக் கண்ணோட்டத்தோடு புதிய முறையில் விரிவாக விளக்கியுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகக் கொள்ளப்படுகின்றது.

இந்நூலில் சைவக் கிரியைகள் ஆன்மார்த்தம், பரார்த்தம், பூர்வம், அபரம் என்ற நால்வகைப்பாட்டிற்குள் அடக்கப்பட்டு, உள்ளுறுப்பாய சடங்குகளையெல்லாம் கிரமமாக வகுத்துக் காட்டி ஒவ்வொரு கிரியையின் இன்றியமையாச் சிறப்பையும், அவ்வவற்றில் அடங்கியுள்ள தத்துவக்கருத்துக்களையும் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளதைக் காணலாம். மேலும் வடமொழியிலும், தமிழ்மொழியிலும் முன்னே வெளிவந்த பத்ததிகள் கிரியைகளின் தத்துவத்தை விளக்க நூல்களிலிருந்து பல மேற்கோள்கள் ஆதாரமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ‘நலம் புரிகொள்கைப் புலம் பரிந்துறையும் செலவு’ என்ற திருமுருகாற்றுப்படை வரிக்கு உரை கூறியுள்ளமையைக் குறிப்பிடலாம் (கந்தையா, 2005) அத்துடன், மேற்கண்ட நூல்கள் இக்கிரியையை இப்படி செய் என்ற ஏவலாக அமைந்தனவே தவிர ஏன் செய்யவேண்டுமென்று எடுத்துரைக்கவில்லை. இக்குறை கந்தையாவின் நூலில் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகமங்களைப் பின்பற்றி எழுந்த சைவ ஆலயங்களில் கிரியைகள் முக்கிய இடம்பெறுகின்றன. இக்கிரியைகளைச் செய்வோரும், செய்விப்போரும் இவற்றின் பயனறியாது இவை வெறும் சம்பிரதாயங்கள் என்ற பார்வையின் கீழ் செயற்படுகின்றார்கள். ஆலயக் கிரியைகள் மற்றும் பூர்வ, அபரக் கிரியைகள் வெறும் சம்பிரதாயங்கள் என்று கருதுவது பொருத்தமற்றதாகும். அவை அனைத்தும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களுள்ளும் இறுதியாகவுள்ள ஞானத்துக்கு நிமித்தமாகும். இவற்றைப் படித்து பயன் பெறும் வகையிலேயே இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்நூலானது சிவாலயக் கிரியைகள் 1, சிவாலயக் கிரியைகள் 2, விரதமும் பிறவும், பூர்வக் கிரியைகள், பூர்வக் கிரியைகளின் பண்பும் பயனும், அபரக் கிரியைகள், அபரக் கிரியைகளும் நாங்களும், அநுபந்தங்கள் என்ற தலைப்புக்களாக பகுக்கப்பட்டு அவை பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றது. இதில் அநுபந்தம் என்ற பகுதியில் சிவாலய உற்சவங்கள், வழிபாடு, சைவவிவேகம், முப்பொருளும் பூசையும், பூதசுத்தி, பூதசுத்திப் பலன் சார்பான விளக்கம், சுத்தியின்றிச் சித்தியில்லை, சிவோகம் பாவனை, அர்ச்சனை, மந்திரம் முதலான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வாழ்க்கையின் ஒரே நோக்கம் இன்பப் பேறு பெறுதலாகும். அந்த உயர்நிலையைப் பெறுவதென்பது சாதாரண விடயமல்ல. மாறாக அது சைவத்தின் சாதனை என்று கூறும் கந்தையா, அச்சாதனை ஒவ்வொரு சமயத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும், சைவ சமயத்தின் சாதனை எத்தகையது என்பதையும் விரிவாக ஆராய்ந்துள்ளார். அந்தவகையில் கடவுளை முன்னிலையாகக் கொண்டு கடவுள் தந்த உடம்பையும், உடற்கருவிகளையும், மனம் முதலிய கருவிகளையும் நேர்ப்படுத்திப் பூ, நீர், தூபம், தீபம் முதலியவை கொண்டு பூசை செய்து அதன் மூலம் கடவுள் அநுபவப் பேற்றைப் பெறுவது சைவம் கண்ட சாதனையாகும் என்கிறார் (மேலது:1-3).

சமயத் தத்துவஞான இணைப்பு பற்றிப் பேசும்போது நமக்குரிய சமயம் சைவம் என்றும், நமக்குரிய தத்துவம் சைவசித்தாந்தம் என்றும் கூறுவதோடு, கடவுள் அருளைப் பெறும்பொருட்டு மக்களால் பின்பற்றப்படுகின்ற ஆசார அநுட்டானங்களும், பக்தி முறையான வழிபாடுகளும் சமயம் என்ற பெயரிலும், கடவுள், உயிர், உலகம் என்ற உண்மைப் பொருள்களைப் பற்றிய அறிவாராய்ச்சியும், விசாரணைகளும் தர்க்க ரீதியான வாதப் பிரதிவாதங்களும் தத்துவ ஞானம் என்ற பெயரிலும் உள்ளடக்கப்படும் என்கிறார். மேலும் இதை விளக்க முற்படுகையில், சைவம் மற்றும் தத்துவஞானம் ஆகிய இரண்டிற்குமிடையிலான பொருந்தாப் போக்குப் பற்றிப் பேசி, அவை ஒன்றோடொன்று தொடர்புபட்டிருக்கும் அம்சங்களையும் எடுத்துரைத்துள்ளார். அவ்வகையில் நோக்குகின்றபோது சைவத்தில் சமயத்துக்கும், தத்துவஞானத்திற்கும் சிறிதளவு கூட வேற்றுமை கிடையாது. சைவசித்தாந்தத்தில் நாம் என்னென்ன பேசுகிறோமோ அந்தந்தக் கருத்துக்களுக்குச் சமதையான அநுசரணை சைவசமயப் பூசைமுறையிலும் இருக்கிறது என்கிறார் (மேலது: 3-5).

சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் பூசை முறைகளிலும் பின்பற்றப்படுகின்றமை எடுத்துரைக்கப்படுகின்றது. அந்தவகையில் சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் விளக்கத்தை முதலில் முன்வைத்து பின்னர், பூசை முறையில் முப்பொருள்களின் இருப்பு பற்றி விளக்கப்படுகின்றது. அவ்வகையில் சைவசித்தாந்தம் மூன்றும் ஒன்றுக்கொன்று வேறாகப் பிரிக்கப்படாதவை என்கிறது. அதாவது பதி வியாபகத்துள் பசு வியாப்பியம். பசு வியாபகத்துள் பாசம் வியாத்தி. அநுபவ முடிவில் இந்த மூன்றும் ஒன்றாகவே உணரப்படுகின்றது.

பூசையிலே சிவம் இருக்கிறது – சுவாமி மூர்த்தம்

பூசிக்கின்ற ஆன்மா – பூசை செய்பவர்

பாசப் பொருள்களாகிய பூசிக்கும் பொருள்கள் - வெற்றிலை, பாக்கு, அன்னம், மேளதாளம், நடனம்

என்றவாறு ஒப்பிட்டு விளக்கும் நூலாசிரியர் பாசப் பொருள்கள் எல்லாம் கவர்ச்சியூட்டுபவை என்கிறார். அதாவது பழத்தையும், பணிகாரத்தையும் கண்டால் வாய் ஊறும். அழகான பட்டைக் கண்டால் கண் மயங்கும் என்று விளக்கி, பாசத்தையும் பூசைப் பொருட்களையும் ஒப்பிட்டு கிரியைகளுள் அடங்கும் சைவசித்தாந்த விளக்கத்தை பதிவு செய்கின்றமை குறிப்பிடத்தக்கது (மேலது: 5-6). தொடர்ந்து அப்பாசப் பொருட்களிலிருந்து விடுபடுவதற்குரிய வழிகளைக் கூறவிழைந்த ஆசிரியர் பொறிகளை நெறிப்படுத்தல் எனும்

தலைப்பில் கிரியையோடு ஒப்பிட்டு அதை விளக்க முற்படுகின்றார். அதாவது பூசையில் பூசைப் பொருட்கள் பல இருந்தாலும் அவற்றையெல்லாம் பார்த்தும், கேட்டும் உணரும் உடலங்கங்கள் அப்பொருட்களை உணர்வதையும் தாண்டி அப்புலன்களாலே இறைவனையும் உணர்கின்றது எனக் குறிப்பிட்டு புலன்களைக் கொண்டே புலனை நெறிப்படுத்தலை கிரியைகள் மூலம் விளக்குகின்றார் (மேலது: 6-7).

சுத்திகரிப்பு எனுந் தலைப்பில் பூசைகளில் இடம்பெறும் மந்திரசுத்தி, திரவியசுத்தி, லிங்கசுத்தி, தானசுத்தி, பூதசுத்தி முதலான சுத்திகரிப்புக்களை உள்ளடக்கிய சுத்திகரிப்பு கிரியையை முதன்மையாக விளக்கி அதனூடாக சைவசித்தாந்த விளக்கத்தை நிறுவ முனைகிறார் ஆசிரியர். அதாவது பூசைக்கென கொண்டு வரப்படும் பால், பழம், மலர், தண்ணீர் முதலாகிய சகல பாசப்பொருள்களும் மாயையின் படைப்புக்களே, நாம் வழிபடும் மூர்த்தியே கல்லிலும், உலோகத்திலும் செய்யப்பட்டிருப்பதனால் அதற்கும் அசுத்தமாயையின் சம்பந்தம் இருத்தல் தவிர்க்க முடியாதது என்று கொண்டு அந்த மூர்த்திக்கே லிங்கசுத்தி என்ற சுத்திகரிப்பு விதி கூறப்படுகிறது. அவ்வாறு அத்திருமேனி அபிசேகத்தால் சுத்திகரிக்கப்பட்டதன் பின்னரே அத்திருமேனியில் இறைவன் ஆவாகணம் செய்யப்படுவார். இதுபோலவே ஆத்மாக்களும் மும்மலங்களிலிருந்து சுத்திகரிப்பு பெறவேண்டும் என விளக்கி சுத்திகரிப்பு கிரியையினையும், ஆன்மசுத்தியையும் ஒப்பிட்டு விளக்குகிறார்.

பூசையில் அத்துவித விளக்கம் பற்றிப் பேசவந்த ஆசிரியர், எம்மால் பெற்றுக் கொள்ளவேண்டிய விளக்கங்களாக, ஆலயப் பூசையிலே சுவாமிக்கு அபிஷேகம் செய்தல், அலங்காரஞ் செய்தல், சாதம், பலகாரம், பழம், பாக்கு முதலியன நிவேதித்தல், சுவாமியை சயனத்தில் அமர்த்தல் முதலியவற்றைச் சுட்டுவதோடு, இச்செயல்கள் பற்றிய தத்துவப் பின்னணியை விளக்குகின்றார். அந்தவகையில் எந்நிலையிலும் சிவம் நமக்கு வேறாயிருப்பதில்லை என்று கூறும் அவர், நமது உடலுக்குள்ளே உடலுக்கு வேறான உயிரொன்று இருப்பது போல, நமது உயிருக்குள்ளே உயிருக்கு வேறான சிவம் என்றும் இருந்து கொண்டிருக்கிறது என்கிறார். மேலும் அவர் கூறுகையில் பொருள் தன்மையளவில் உடலுக்கு உயிர் வேறென்றாலும் கலப்பினால் ஒன்றாகவே இருக்கிறது என்றும், உயிர் உடலோடு கலப்பினாலொன்றாய் இருந்து உடலை நிலைக்கச் செய்வது போல சிவம் உயிரோடொன்றாய் இருந்து அதை நிலைக்கச் செய்கிறது என்றும், உயிர்ப் பொருள் தன்மையால் உடலுக்கு வேறாயிருந்து உடலைச் செலுத்துவது போல சிவமும் உயிருக்கு வேறாயிருந்து அதனை அநுபவங்களில் செலுத்துகின்றது என்றும், உயிர் உடலோடு உடனாயிருந்து அதற்கு அநுபவத்தை ஊட்டுவதைப் போல சிவம் உயிரோடு உடனாயிருந்து அதை அநுபவிக்கிறது என்றும் குறிப்பிடும் அவர், உடல், உயிர் - சிவம் என்ற இரண்டு பகுதிகளிலும் ஒன்றாதல், வேறாதல், உடனாதல் என்ற மூன்று நிலைகளையும் நிறுவிச் செல்கின்றார் (மேலது: 24-26).

சிவாலயக் கிரியைகள் எவ்வாறு சைவசித்தாந்த ஞானப்பேற்றை இலக்காகக் கொண்டனவோ அதுபோலவே பூர்வக் கிரியைகளும் சைவசித்தாந்த ஞானப்பேற்றை இலக்காகக் கொண்டமைந்துள்ளதோடு, சித்தாந்த தத்துவ உண்மைகளை அவற்றின் அடிப்படைகளாகவும் கொண்டமைந்துள்ளன. அந்தவகையில் உலகிலுள்ள ஒவ்வொரு

உயிர்களும் சைவசித்தாந்த ஞான அநுபவத்தைப் பெறும் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்பது சைவசமயத்தின் குறிக்கோள் என்பதை நினைவுகூறும் ஆசிரியர், எவ்வாறு அவை சித்தாந்த அநுபவத்திற்கு தகுதிபெற்று வரவேண்டும் என்பதையும் விரிவாக விளக்கிச் சென்றிருப்பதையும் காணமுடிகின்றது (மேலது:90-116).

மேலும் பூர்வக் கிரியைகள் பற்றிக் குறிப்பிடுகையில் சைவ நாற்பாதங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றின் அந்தரங்கத் தொடர்பை விளக்கிச் சென்றிருப்தையும் அவதானிக்கமுடியும். அவ்வகையில் நாற்பாதங்களுக்குரிய தொடர்பை விளக்குவதற்கு,

“விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்

அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே”

என்ற தாயுமானவர் சுவாமிகளின் பராபரக்கண்ணிப் பாடலை சான்றாகக் கொள்கிறார். இவ்வாறு பூர்வக் கிரியைகள் பற்றி எடுத்துரைத்த ஆசிரியர், அபரக் கிரியைகள் பற்றியும் பேசத் தவறவில்லை. சைவசித்தாந்தம் முக்திக்கு முதற்படியாகக் கூறும் தீட்ஷை அந்தியேஷ்டிக் கிரியைகளிலும் முக்கியப்படுத்தப்படுகிறது.

நிர்வாண அந்தியேஷ்டி

விஷேட அந்தியேஷ்டி - உயர் தீட்ஷையாளர்களுக்கு உரியவை.

சமய அந்தியேஷ்டி - சாதாரண சமய தீட்ஷையாளர்களுக்குரியது.

எனும் மூவகை அந்தியேஷ்டிகளும் ஆன்மாக்கள் பெற்றிருக்கும் தகுதிகளின் அடிப்படையிலேயே வகைப்படுத்தப்பட்டுள்ளன. தன் தகுதிக்கேற்ற அளவில் சிவகதியில் மேல்நிலை அடைவதற்காகவும், தன் வாழ்வில் அது செய்துவந்த சமயக்கிரியைகளில் அவ்வப்போது ஏற்படக் கூடியதாகவிருந்த குறைகளை நிறைவேற்றுவதற்காகவும் இந்துசமய அந்தியேஷ்டி செய்யப்படுகிறது.

சீவன் சீவத் தன்மைகள் கெட்டு சிவத்தன்மை அடையச் செய்தலே அபரக்கிரியைகளின் பண்பும், பயனும் என்பது கந்தையா தரும் விளக்கமாகும். நாம் ஒவ்வொருவரும் இக்கிரியைகளுக்கு தகுதியாகும் நிலையில் நம்மை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதன் அவசியத்தை இக்கிரியைகள் உணர்த்துகின்றன. இவற்றிற்கு அடிப்படைத் தகுதி சிவதீட்ஷையும், அநுஸ்டான ஆச்சாரங்களும் ஆகும் (மேலது:145-148).

சைவாலயக் கிரியைகள்

கோப்பாய் சிவம் என்பவரால் 1986ஆம் ஆண்டு ‘சைவாலயக் கிரியைகள்’ எனும் நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலுக்கு மதிப்புரை வழங்கியுள்ள பண்டிதர் மு. கந்தையா, “சிவாலய நித்திய நைமித்திய கிரியைகள் பற்றி சாமான்ய அறிவுத்தரம் உள்ளாரும் தெளிவாக கொள்ளற்கேற்ற இலகுநடையில் நூல் உருவாகியிருப்பது மகா விசேடமாகும்” எனக் கூறியிருப்பது இந்நூலின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாயுள்ளது (சிவாநந்தசர்மா, 2016: 11).

முதல் அத்தியாயம் ஆலய வழிபாடு எனும் தலைப்பில் ஆரம்பமாகின்றது. சித்தாந்த வாழ்வைக் கடைப்பிடிக்கும் சைவர்கள் ஆலய வழிபாட்டை முறையாக மேற்கொள்ளும்

ஒழுங்குமுறைகள் இதில் விளக்கப்பட்டுள்ளன. அடுத்ததாக அமைந்துள்ள சைவசித்தாந்தமும் கிரியைகளும் எனும் தலைப்பின் கீழான விடயங்கள் சித்தாந்த தத்துவங்களோடு கிரியைகளை இணைத்து விளக்கி நிற்கின்றன.

“சைவம் சிவசம்பந்தமானது. சிவனை முழுமுதற் கடவுளாய் கொண்டது. சிவதத்துவமே தத்துவங்களின் எல்லையெனக் கொள்வது. சைவசித்தாந்தத்தை அனுசரிப்பதாலும் வேதத்தை பெரிதும் பின்பற்றுவதனாலும் நமது சைவநெறியை வைதீக சித்தாந்தம் என்று பண்டிதமணி குறிப்பிடுகின்றார்.” (மேலது:23)

என பண்டிதமணியின் கூற்றை மேற்கோள் காட்டியுள்ள கோப்பாய் சிவம் வைதிக தளத்தை அரவணைத்துக் கொண்ட, சைவசித்தாந்தம் நிறைந்த வழிபாடாக சைவாலயக் கிரியைகளை விளக்க முனைகின்றார். தென்னிந்திய வாழ்க்கை முறைக்கு இயைபுடையதாக சைவசித்தாந்தம் காணப்படுவதனால் அது தென்னிந்திய மக்களது வழிபாடுகளிலும், வாழ்வியலிலும் இலகுவாக இழையோடி விட்டதாக அவர் கருதுகின்றார்.

ஆலயங்கள் ஆகம விதிப்படி ஒழுங்காக அமைக்கப்பட்டிருப்பதனால் அங்கு நிகழும் தத்துவார்த்த கிரியைகள் எதிர்பார்க்கும் பலனைப் பூரணமாகத் தரவல்லவை. அவை பக்தர்களால் முறையாகக் கடைப்பிடிக்கப்படுமிடத்து முக்திக்குரிய சாதனமாகவும் அமைந்து விடும் என்பது ஆசிரியரின் கருத்தாகவுள்ளது.

கிரியைகள் வேதாகமங்களின் வழி தோற்றம் பெற்று இன்று பல மாற்றங்களை அடைந்துள்ள வரலாற்றை ‘கிரியைகள் - ஒரு சுருக்க வரலாறு’ என்ற தலைப்பின் கீழ் விளக்கிக் காட்டியுள்ளார். பசுவின் உடலிலுள்ள பாலை அதன் மடியிலிருந்து மட்டுமே பெறுதல் முடியும். உலகெங்கிலும் வியாபித்திருக்கும் ஆண்டவனை வழிபட்டு அவனருள் பெற ஆலயம் அவசியமாகின்றது. பசுவின் மடியில் கைவைத்த மாத்திரத்தில் பால் சுரப்பதில்லை. அதன் கன்றை சிறிது நேரம் ஊட்டும்படி விட்டுப் பின்னர் நம் முயற்சியாலே கறந்தெடுத்தல் வேண்டும் என்ற யதார்த்த நிகழ்வோடு ஆலயக் கிரியைகளையும் ஆண்டவன் அருளையும் ஆசிரியர் இணைத்துப் பேசுவது நயக்கத்தக்கதாகின்றது (மேலது:34).

ஆலயக் கிரியைகள் பலவகையான நாத வாத்தியங்களை எழுப்புவதற்குக் காரணம் இறைவன் நாத தத்துவமானவன் என்பதனை விளக்குவதற்காகவே ஆகும். அதுபோல நந்தி பலிபீடத்தைப் பாராது கர்ப்பக் கிரகத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை நோக்கியவாறு அமைக்கப்பட்டிருத்தலும் ஆன்ம தத்துவத்தையே காட்டுகின்றது. அதாவது “பலிபீடம் மலநீக்கத்திற்கு அறிகுறி. நந்தி - ஆன்மா. ஆன்மா தனது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைப் பலியிட்டு அவற்றிலிருந்து நீங்கி பதியாகிய பரம்பொருளை நாட வேண்டும்” எனக் குறிப்பிடப்பட்டு, ஆலயக் கிரியைகளை சைவசித்தாந்த தத்துவத்தோடு இணைத்து நிறுவிச் சென்றுள்ளார் (மேலது: 38)

தொடர்ந்து, ஆலயங்களில் நிகழும் பூர்வாங்கக் கிரியைகள் சைவசித்தாந்தத்தோடு தொடர்புபடுத்தி விளக்கப்பட்டுள்ளன. அபிஷேகம் தூய்மையான இறைவனை வெளிக்கொணர்வது போல ஆன்மாக்களும் தம் மலபந்தங்களைக் கழுவி தூய்மை பெற வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துகின்றது. அதுபோலவே தீபாராதனை ஆணவ இருளில்

மறைந்து நிற்கும் பதியை ஞானமெனும் தீபத்தின் துணையோடு கண்டு கொள்ளலாம் என்பதனை உணர்த்துகின்றது. கருவறையில் போடப்பட்டுள்ள திரை மாயைத் திரையை ஒத்தது. திரை விலகி இறை தரிசனம் கிடைப்பது மாயை விலகினாலே இறைவனைக் காணமுடியும் என்பதை உணர்த்துகின்றது.

நித்திய, நைமித்திய கிரியைகள் எனும் பகுதியில் கூறப்பட்டுள்ள விடயங்கள் சித்தாந்த வாழ்வியலுக்கான அர்ச்சகர்களது ஒழுக்கத்தையும், அடியார்களது ஒழுக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன. ஆலயக் கிரியைகளில் முக்கியத்துவப்படுத்தப்படும் கொடிச் சீலை சைவசித்தாந்த தத்துவத்தோடு மிக நெருக்கமான சம்பந்தம் கொண்டது என ஆசிரியர் விளக்குகின்றார்.

கொடிமரத்தில் ஏற்றப்படும் கொடிச்சீலையின் நீளம் கம்பத்தின் உயரத்தைப் போல் இருமடங்கு இருத்தல் வேண்டும். அந்த ஆலய மூர்த்தியின் வாகனமும், அதன் முதுகில் அம்மூர்த்தியின் அஸ்திர தேவரும் கொடிச்சீலையின் மத்தியில் வரையப்பட்டிருக்கும். இது ஆன்மா மலபரிபாகம் அடைந்ததைக் குறிக்கும் கொடிச்சீலையின் படம் தெளிவாகத் தெரியும்படி மேற்புறத்தில் குறுக்குச் சட்டம் ஒன்று கட்டப்பட்டு அதன் மேல் கொடியேற்ற உதவும் கயிறு மேற்பாக முடிச்சோடு அமைந்திருக்கும். அம் முடிச்சு பிரம்மக் கிரந்தி எனப்படும். இதில் இணைக்கப்பட்டுள்ள கொடியை ஏற்றப் பயன்படும் மஞ்சள் கயிறு ஆன்மாவை இறைவனிடம் சேர்ப்பிக்கும் திருவருள் சக்தியாகும். கொடித்தம்பம் பதியையும், கொடிச் சீலை பசுவையும், தர்ப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கும் (மேலது:86).

கும்பாபிஷேகம் எனும் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் எங்கும் நிறைந்த அருவத் திருமேனியினரான இறைவனை உருவத் திருமேனியில் சேர்ப்பிக்கும் தத்துவத்தை விரிவாகக் குறிப்பிடுகின்றது. அதுபோல சிவாலயக்கிரியைகளில் முக்கியப்படுத்தப்படும் யாகம், அதிற் பொதிந்துள்ள தத்துவங்களை யாகசாலை, யாகபூசை என்பனவற்றின் சிறப்பான விளக்கம் எனும் அத்தியாயம் தெளிவுபடுத்துகின்றது.

நிறைவுரை

இந்திய தத்துவச் சிந்தனை மரபில் இன்றும் நிலைத்து வாழும் ஒரு சமய தத்துவமாக விளங்குவது சைவசித்தாந்தமாகும். இந்தியாவில் தோன்றி வளர்ச்சி பெற்ற சைவசித்தாந்தம் இலங்கையிலும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது. சைவசித்தாந்த வளர்ச்சிக்கு இலங்கையரின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்க வகையில் இடம்பெற்றுள்ளது. அவற்றுள் நூல்கள் பிரதானமானவை. அங்குள்ள மக்களின் வாழ்வியலோடு சைவசித்தாந்தம் கலந்துள்ளது என்பதை எடுத்துரைப்பதற்குச் சைவாலயக் கிரியை விளக்கமாக எழுந்த மேற்குறித்த நூல்கள் சான்றாகின்றன எனக் குறிப்பிடலாம்.

உசாத்துணை நூல்கள்

1. கந்தையா, மு. (2005). சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள், இலக்கிய கலாநிதி மு.கந்தையா நூல் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.
2. கைலாசநாதக்குருக்கள், கா. (2009). சைவத் திருக்கோவிற் கிரியை நெறி, பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் ஞாபகார்த்த சபை, யாழ்ப்பாணம்.
3. சிவபாதசுந்தரம், சு. (2000). சைவக் கிரியை விளக்கம், சைவ பரிபாலனசபை, யாழ்ப்பாணம்.
4. சிவாநந்தசர்மா, ப. (பதி.). (2016). சைவாலயக் கிரியைகள், சர்வானந்தமயபீடம், யாழ்ப்பாணம்.
5. செல்வமனோகரன், தி. (பதி.). (2017). சிவஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம், பருத்தித்துறை நண்பர்கள், கல்வி சமூக நலன்சார் அமைப்பு, யாழ்ப்பாணம்.
6. ஜம்புலிங்கம், சே, வெ. (பதி.). (2015). மகோற்சவ விளக்கம் – அச்சுவேலி ச.குமராசுவாமி குருக்கள் எழுதியது, இந்துக்குருமார் அமைப்பு, அகில இலங்கை இந்துமாமன்றம், இலங்கை.